# நிலையில்லா சர்வதேச சூழல்

## ஆசியான்–இந்தியா மாநாட்டில் பிரதமர் மோடி



மாநாட்டில் அமெரிக்க துணை அதிபர் கமலா ஹாரிஸ், மலேசிய பிரதமர் அன்வர் இப்ராஹிமுடன் உரையாடிய பிரதமர் மோடி.

**ஜகார்த்தா, செப். 7:** சர்வதேச சூழலில் நிலையில்லாத் தன்மை அதிகரித்து வருகிறது என்று பிரதமர் மோடி கூறினார். எனினும், இந்தியாவுக்கும் ஆசியான் நாடுகளுக்கும் இடையேயான நல்லுறவு தொடர்ந்து வளர்ச்சி கண்டு வருகிறது என்று அவர் தெரிவித்தார்.

தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்கான ஆசியான் கூட்டமைப்பில் 10 நாடுகள் இடம்பெற்றுள்ளன. ஆசியான்–இந்தியா இடையேயான 20-ஆவது மாநாடு, இந்தோனேசிய தலைநகர் ஜகார்த்தாவில் வியாழக்கிழமை (செப்.7) நடைபெற்றது. மாநாட்டில் பங்கேற்ற பிரதமர் மோடி கூறியதாவது:

**பேச்சுமூலம் தீர்வு:** சர்வதேச வளர்ச்சியில் ஆசியான் கூட்டமைப்பு முக்கியப் பங்கு வகித்து வருகிறது. தற்போதைய சர்வதேச சூழல் நிலையில்லாத் தன்மையை எதிர்கொண்டுள்ளது. பயங்கரவாதம், தீவிரவாதம், மோதல்கள் உள்ளிட்டவை மிகப் பெரும் அச்சுறுத்தல்களாகத் திகழ்கின்றன. அவற்றை எதிர்கொள்வதற்கு அனைத்து நாடுகளும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும். இந்த சகாப்தம் போருக்கானது அல்ல; அனைத்துவித பிரச்னைகளுக்கும் பேச்சுமூலம் தொடர்புடைய நாடுகள் தீர்வு காண வேண்டும்.

**சர்வதேச கடல் சட்டத்துக்கு...:** குறிப்பிட்ட நாட்டின் இறையாண்மை, பிராந்திய ஒருமைப்பாடு ஆகியவற்றைக் காப்பதற்கு அனைத்து நாடுகளும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டியது அவசியம். தென்சீனக் கடலில் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள் சர்வதேச கடல் சட்டத்துக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும்.

இந்தோ-பசிபிக் பிராந்தியத்தில் அமைதியை நிலைநாட்டுவதற்கு பிராந்தியத்தில் உள்ள அனைத்து நாடுகளும் உறுதி கொண்டுள்ளன. சர்வதேச கடல் சட்டத்தை அனைத்து நாடுகளும் மதித்து நடக்க வேண்டும். சட்டத்துக்கு உட்பட்ட வர்த்தக நடவடிக்கைகள் அனுமதிக்கப்பட வேண்டும். பிராந்தியத்தில் இடம்பெற்றுள்ள நாடுகள், மற்ற நாடுகளின் விருப்பத்துக்கு மதிப்பளித்துச் செயல்பட வேண்டும்.

**21-ஆம் நூற்றாண்டு-ஆசிய நாடுகளுக்கானது:** நடப்பு 21-ஆம் நூற்றாண்டானது ஆசிய நாடுகளுக்கு உரியது. சுதந்திரமான இந்தோ-பசிபிக் பிராந்தியத்தை உறுதி செய்வதையும், தெற்குலக நாடுகளின் குரலை ஓங்கி ஒலிக்கச் செய்வதையும் இந்தியாவும் ஆசியான் நாடுகளும் பொதுவான இலக்குகளாகக் கொண்டிருக்கின்றன. இந்தோ-பசிபிக் பிராந்தியத்தில் வளர்ச்சியின் மையமாக ஆசியான் நாடுகள் திகழ்கின்றன. அந்நாடுகளுடன் இந்தியா ஒருங்கிணைந்து செயல்பட்டு வருகிறது.

**முக்கியப் பங்கு:** வரலாற்று ரீதியிலும், புவியியல் ரீதியிலும் இந்தியாவும் ஆசியான் நாடுகளும் நெருங்கிச் செயல்பட்டு வருகின்றன. பிராந்திய ஒற்றுமை, அமைதி, வளர்ச்சி, கொள்கைகள் உள்ளிட்டவை இருதரப்புக்கும் இடையேயான ஒத்துழைப்பை வலுப்படுத்தி வருகின்றன. இந்தோ-பசிபிக் பிராந்தியத்தை மையமாக வைத்து இந்தியா முன்னெடுக்கும் நடவடிக்கைகளில் ஆசியான் நாடுகளுக்கு முக்கியப் பங்குள்ளது.

**மக்கள் நலனை மையப்படுத்தி...:** கரோனா தொற்று பரவலுக்குப் பிந்தைய உலகத்தில் சட்டத்தின் அடிப்படையிலான செயல்பாடுகள் உறுதி செய்யப்பட வேண்டும். நாடுகளின் நடவடிக்கையானது மக்கள் நலனை மையப்படுத்தி அமைய வேண்டும். இந்தியாவின் கிழக்கு நோக்கிய செயல்பாட்டுக் கொள்கைக்கு ஆசியான் நாடுகள் மையத் தூண்களாக விளங்குகின்றன. இந்தோ-பசிபிக் பிராந்தியத்தின் வளர்ச்சி சார்ந்த விவகாரங்களில் ஆசியான் நாடுகளுக்கு இந்தியா முழு ஆதரவு வழங்கி வருகிறது என்றார் பிரதமர் மோடி.

**நாடுகளின் பிரதிநிதிகள் பங்கேற்பு:** கடல்சார் பாதுகாப்பு, சர்வதேச உணவுப் பாதுகாப்பு ஆகியவை தொடர்பான கூட்டறிக்கை மாநாட்டின்போது வெளியிடப்பட்டது. இந்த மாநாட்டில் இந்தியா, சீனா, ஜப்பான், தென் கொரியா, ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து, அமெரிக்கா, ரஷியா உள்ளிட்டவற்றின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

## வளர்ச்சிக்கு 12 அம்ச திட்டம்

இந்தியாவுக்கும் ஆசியான் நாடுகளுக்கும் இடையேயான நல்லுறவை மேலும் வலுப்படுத்துவதற்கான 12 அம்ச திட்டத்தை ஆசியான்–இந்தியா மாநாட்டில் பிரதமர் மோடி அறிவித்தார். அதில் முக்கியமானவை:

தென்கிழக்கு ஆசியா–இந்தியா–மேற்கு ஆசியா–ஐரோப்பா இடையே போக்குவரத்து தொடர்பை வலுப்படுத்துதல்; இந்தியாவின் எண்ம கட்டமைப்பு வசதிகளைப் பகிர்ந்து கொள்ளுதல்; பயங்கரவாதத்துக்கு எதிராக ஒருங்கிணைந்த நடவடிக்கை; தெற்குலகின் குரலை பன்னாட்டு அமைப்புகளில் எதிரொலித்தல்; ஆசியான்–இந்தியா நிதித் தொகுப்பை உருவாக்குதல்; நிதித் தொடர்பை வலுப்படுத்துதல்; பொருளாதார ஆய்வு நிறுவனத்தை உருவாக்குதல்; சர்வதேச பாரம்பரிய மருந்துகளுக்கான மையத்தில் ஆசியான் நாடுகள் இணைதல்; மலிவு விலை மருந்துகளை மக்களுக்கு வழங்குவதில் இந்தியாவின் அனுபவத்தைப் பகிர்ந்து கொள்ளுதல்;

பேரிடரைத் தாங்கவல்ல கட்டமைப்புகளுக்கான கூட்டமைப்பில் ஆசியான் நாடுகள் இணைதல்; இந்தியா முன்னெடுத்துள்ள சுற்றுச்சூழலுக்கான வாழ்க்கைமுறை திட்டத்தில் ஆசியான் நாடுகள் இணைதல் ஆகியவை இடம்பெற்றுள்ளன.

## இந்தியா திரும்பினார் பிரதமர் மோடி

இந்தோனேசிய அரசுமுறைப் பயணத்தை முடித்துக் கொண்டு பிரதமர் மோடி வியாழக்கிழமை இந்தியா திரும்பினார். இந்தோனேசியாவில் தனக்கு சிறப்பான வரவேற்பை வழங்கியதற்காக அந்நாட்டு அரசுக்குப் பிரதமர் மோடி எக்ஸ் சமூக வலைதளம் மூலம் நன்றி தெரிவித்துள்ளார்.

ஜி20 கூட்டமைப்புக்குத் தலைமை வகிக்கும் இந்தியா, அக்கூட்டமைப்பின் தலைவர்களுக்கான மாநாட்டை வரும் 9, 10 ஆகிய தேதிகளில் தில்லியில் நடத்தவுள்ளது. அதன் காரணமாக, இந்தோனேசிய மாநாட்டை முடித்துக் கொண்டவுடன் பிரதமர் மோடி இந்தியா திரும்பியதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது. பிரதமரின் இந்தப் பயணமானது, ஆசியான் நாடுகளுடனும், கிழக்கு ஆசிய நாடுகளுடனும் நல்லுறவை மேலும் வலுப்படுத்த உதவும் என்றும் வெளியுறவு அமைச்சகம் கூறியுள்ளது.

EVA STALIN

# வையத்தலைமை கொள்ளும் பாரதம்!



**கோதை ஜோதிலட்சுமி**

**இந்தியாவின் ஜி20 தலைமைப் பொறுப்பு உலகளாவிய தலைமைத்துவத்திற்கு ஒரு மைல்கல் எனலாம். இந்தியா தனது தலைமைத்துவத்தில் சிக்கலான சவால்களை எதிர்கொள்ள முக்கிய பொருளாதார நாடுகளிடையே விவாதங்களை முன்னெடுத்து வழிநடத்துகிறது.**

# இடப்பெயர்வும் தாய்மொழி இழப்பும்

**பேரா. தி. ஜெயராஜசேகர்**

அண்மையில், 'இந்திய மக்கள் மொழியியல் ஆய்வு நிறுவனம்', 780 இந்திய மொழிகளில் ஆய்வு மேற்கொண்டதில், கடந்த 70 ஆண்டுகளில் இந்தியாவில் 250 மொழிகள் இறந்து விட்டதும் 600 மொழிகள் அழிந்து கொண்டிருப்பதும் தெரியவந்துள்ளது.

ஒரு மொழி அழிந்தால் உலகைப் பார்க்கும் தனித்துவமான வழி ஒன்று மறைந்துவிடும். ஒரு மொழி அழியும்போது நாம் அந்த மொழியை மட்டும் இழக்கவில்லை. சிறப்பாக வாழ உதவும் அறிவையும் சேர்த்து இழக்கிறோம்.

தாவரங்களின் பண்புகள், அவற்றின் மருத்துவப் பயன்பாடுகள், தாவரங்கள் காணப்படும் இடங்கள் ஆகியவற்றைப்பற்றி கூறும் மொழிகள் பல அம்மொழிகளைப் பேசுவோரை விரைவாக இழந்து வருகின்றன. இந்த அழிந்து வரும் மொழிகள் விலங்குகளைப் பற்றியும் அவை வாழும் சூழல் பற்றிய அறிவையும் கொண்டுள்ளன.

நாம் நமது தாய்மொழியை அடுத்த தலைமுறைக்குக் கற்றுக்கொடுக்காதபோது மொழியை இழக்கிறோம். பொருளாதாரத்திற்கு சாதகமான மொழிகளை பேசுவதற்கு சிறிய எண்ணிக்கையிலான மக்கள் சமூகம் முன்வரும்போது அவர்களது தாய்மொழி அழிவை நோக்கிச் செல்கிறது.

மக்கள், பொருளாதார ரீதியாக சாதகமான மொழிகளைப் பேசுவதற்கு இடம்பெயர்வு ஒரு முக்கியக் காரணமாகும். பொருளாதாரமும் கலாசாரமும் ஏற்படுத்திய மாற்றம் காரணமாக, அமெரிக்காவில் குடியேறிய இரண்டாம் தலைமுறையினரில் பெரும்பாலானோர் தங்களின் தாய்மொழியைவிட ஆங்கிலத்தில் சரளமாக பேசுகிறார்கள்.

உலகில் பழங்குடி மொழிகள் அழியும் அபாயத்தை பண்டைய இடம்பெயர்வுகளின் தாக்கத்திலிருந்து அறிந்துகொள்ளலாம். 2021-ஆம் ஆண்டு நிலவரப்படி அமெரிக்காவில் 98 சதவீத பழங்குடி மொழிகளும், ஆஸ்திரேலியாவில் 89 சதவீத பழங்குடி மொழிகளும் அழியும் ஆபத்தில் இருந்ததாக தரவுகள் கூறுகின்றன.

காலனித்துவ வரலாற்றைக் கொண்ட இருநாடுகளிலும் முந்தைய நூற்றாண்டுகளில் பெரும்பாலான மக்கள் ஐரோப்பாவிலிருந்து வந்து குடியேறியுள்ளனர். இந்த இடப்பெயர்வுகள் இன்றுவரை இந்நாடுகளின் பூர்விக மொழிகளை பாதிக்கின்றன.

இந்நாடுகளில் உள்ளவர்கள், தங்கள் தாய்மொழியை தங்களது பிள்ளைகளுக்கு கற்றுக்கொடுக்காததாலும் ஆங்கில மொழியைப் பேச ஆரம்பித்ததாலும் இந்த நாடுகள் தங்கள் பூர்விக மொழிகளை இழந்து வருகின்றன.

தமிழ்நாட்டின் நீலகிரி மாவட்டத்தில் உள்ள ஏழு கிராமங்களில் தோடா மொழி பேசுபவர்கள் எண்ணிக்கை 2000; கோட்டா மொழி பேசுபவர்கள் எண்ணிக்கை 2,500. இப்படி சுருங்கிவிட்ட நிலையில் இம்மொழிகளுடன் ஆலு குரும்பா, எரவல்லா, பீட்டா போன்ற பூர்விக பழங்குடி மொழிகளும் அழியும் நிலையில் உள்ளன.

இன்றைய இடப்பெயர்வு நாளைய மொழி இழப்பிற்கு மறைமுக் காரணமாகலாம். 'இடப்பெயர்வு: உலகளாவிய போக்குகள்' என்ற அமைப்பு 2022-இல் வெளியிட்ட அறிக்கையின்படி, உலகளவில் 10.8 கோடிக்கும் அதிகமான மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர். இவர்களில் சுமார் 6.1 கோடி பேர் தங்கள் சொந்த நாட்டுக்குள்ளேயே இடம்பெயர்ந்துள்ளனர்.

சொந்த நாட்டுக்குள் நிகழ்ந்த இடப்பெயர்வுக்கு, வெள்ளம், புயல் போன்ற சுற்றுச்சூழல் பேரழிவுகளும், மோதல், வன்முறை போன்றவையும் காரணங்கள் எனவும் அந்த அறிக்கை குறிப்பிடுகிறது.

2022-ஆம் ஆண்டில், ஐரோப்பாவிலும் மத்திய ஆசியாவிலும் நிகழ்ந்த அனைத்து உள்நாட்டு இடப்பெயர்வுகளுக்கும் மனித மோதல்களும் வன்முறைகளுமே காரணங்களாக இருந்தன. இதற்கு நேர்மாறாக, தெற்காசியா, கிழக்காசியா, பசிபிக் பகுதிகளில் உள்ள அனைத்து உள்நாட்டு இடப்பெயர்வுகளுக்கும் சுற்றுச்சூழல் பேரழிவுகளே காரணமாக இருந்தன.

உலகில் அழியும் நிலையில் உள்ளதாக கருதப்படும் மொழிகளில் மூன்றில் ஒரு பங்கிற்கும் மேற்பட்டவை, ஆசியாவிலும் பசிபிக் பிராந்தியங்களிலும் உள்ள பப்புவா நியூ கினியா, வனுவாட்டு, இந்தோனேசியா, இந்தியா, பிலிப்பின்ஸ் ஆகிய ஐந்து நாடுகளில் மட்டுமே பேசப்படுகின்றன.

839 மொழிகள் பேசும் 90 லட்சம் மக்களைக் கொண்டிருக்கும் பப்புவா நியூ கினியாவில் 313 மொழிகள் அழிந்துகொண்டு வருவதாக அந்நாட்டு மொழியியல் ஆய்வுகள் கூறுகின்றன. வனுவாட்டு நாட்டில் வசிக்கும் 3,00,000 மக்கள் 108 வெவ்வேறு மொழிகள் பேசுகிறார்கள். இம்மொழிகளில் பாதிக்கும் மேற்பட்டவை அழியும் அபாயத்தில் உள்ளவாம்.

இந்தோனேசியாவில் 704 மொழிகளும் இந்தியாவில் 424 மொழிகளும் பிலிப்பின்ஸில் 175 மொழிகளும் பேசப்படுகின்றன. இந்த மூன்று நாடுகளில் பேசப்படும் மொழிகளில் கிட்டத்தட்ட பாதி மொழிகள் அழிந்து வருகின்றன என்று ஆய்வுகள் கூறுகின்றன.

அழியும் நிலையில் உள்ளதாக அறியப்படும் மொழிகளைப் பேசுபவர்கள் பேரழிவு காரணமாகவோ, வன்முறை நிகழ்வுகள் காரணமாகவோ தங்களுடைய சிறிய சமூகங்களை விட்டு விலக நேரிடுகிறது. இது போன்று இடம் பெயர்ந்தவர்கள் தங்களின் சந்ததியினருக்கு தங்கள் கலாசாரத்தையும் தாய்மொழியையும் கற்றுக் கொடுப்பதற்கான வாய்ப்புகள் மிகவும் குறைவு.

ஒரு மொழி அழிவதற்கு, அம்மொழி பேசும் மக்களின் எண்ணிக்கை குறைவது மட்டுமல்லாமல், அம்மொழியின் பொருளாதார, கலாசார மதிப்புகளும் காரணங்களாக அமைகின்றன.

தமிழ்நாட்டில் மேற்குத் தொடர்ச்சி மலையின் ஆனைமலைப் பகுதியில் பேசப்படும் பழங்குடி மொழியான எரவல்லா, தற்போதைய பழங்குடி தலைமுறையினரால் பயன்படுத்தப்படுவதில்லை. அவர்கள் தமிழும் ஆங்கிலமும் படித்து நகரங்களில் வேலை தேடுவதில் அதிக ஆர்வம் காட்டுகின்றனர். அதனால் அந்த இனத்தை சார்ந்த இளைஞர்கள் எரவல்லா மொழியைக் கற்றுக்கொள்ள விரும்பவில்லை.

இடப்பெயர்வு காரணமாக மக்கள் தாங்கள் கூடி வாழ்ந்து வந்த சொந்த சமூகத்தை இழக்கிறார்கள். தாய்மொழி அடிப்படையில் சமூகங்கள் ஒருங்கிணைந்து இருப்பதை உறுதிசெய்தலும் வாழ்வதற்கான சாத்தியமான சூழலை உருவாக்குதலும் அழிந்து வரும் மொழிகளைப் பாதுகாப்பதற்கான வழிகளாகும்.

# விமானப் படையில் விரைவில் இணையும் 'ஏர்பஸ் சி-295' விமானம்

**புது தில்லி, செப். 7:** இந்திய விமானப் படைக்கு ஏர்பஸ் நிறுவனத்தின் 'சி-295' ரக போக்குவரத்து விமானத்தின் முதல் விமானம் இந்த மாதத்துக்குள் வழங்கப்படும் என அந்நிறுவனத்தின் இந்திய பிரிவுத் தலைவர் ரெமி மெய்லார்டு வியாழக்கிழமை தெரிவித்தார்.

ஏர்பஸ் நிறுவனத்தின் தயாரிப்பான சி-295 ரக போக்குவரத்து விமானம், 10 டன்கள் வரை சுமை தாங்கிச் செல்லும் திறன்கொண்டது. இந்த விமானம் 71 வீரர்கள் அல்லது 50 பாராசூட் படைப்பிரிவு வீரர்களைச் சுமந்து செல்லும். மேலும், குறுகிய அல்லது ஆயத்தமில்லாத ஓடுதளங்களிலும் இந்த விமானத்தை இறக்கவும் மேலெழும்பச் செய்யவும் தகுதி வாய்ந்தது.

விமானப்படையின் தற்போதைய கனரக விமானங்கள் அணுக முடியாத இடங்களில் தளவாட நடவடிக்கைகளை மேற்கொள்ள இந்த சி-295 ரக விமானங்களைப் பயன்படுத்த திட்டமிடப்பட்டுள்ளன.



சி-295 (கோப்புப்படம்).

அதன்படி கடந்த 2021-ஆம் ஆண்டு செப்டம்பரில், பாதுகாப்புப் படைகளின் பயன்பாட்டுக்காக 56 சி-295 ரக போக்குவரத்து விமானங்களை வாங்குவதற்கு ஏர்பஸ் நிறுவனத்துடன் இந்தியா ஒப்பந்தத்தில் ஈடுபட்டது.

ஒப்பந்தத்தின்படி, ஸ்பெயினில் உள்ள ஏர்பஸ் நிறுவனத்தின் தொழிற்சாலையில் 16 விமானங்கள் தயாரிக்கப்பட்டு இந்தியாவுக்குவழங்கப்படும். இந்தியாவின் வதோதராவில் ஏர்பஸ் நிறுவனத்துடன் இணைந்து டாடா நிறுவனம் அமைக்கும் தொழிற்சாலையில் மற்ற 40 விமானங்கள் உருவாக்கப்படும்.

அந்த வகையில் ஸ்பெயின் நாட்டில் தயாரிக்கப்பட்ட முதல் சி-295 விமானம் இந்திய விமானப் படைக்கு இந்த மாதத்துக்குள் வழங்கப்படும் என அந்நிறுவனத்தின் இந்திய பிரிவுத் தலைவர் உறுதிப்படுத்தினார்.

விமானத் துறையில்பொறியாளர்களுக்குப் பயிற்சியளிப்பதற்கு மத்திய அரசின் கதி சக்தி விஸ்வ வித்யாலயா பல்கலைக்கழகம் மற்றும் ஏர்பஸ் நிறுவனம் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் வியாழக்கிழமை கையொப்பமானது.

இதையடுத்து நடந்த செய்தியாளர் சந்திப்பில் பங்கேற்ற ஏர்பஸ் இந்தியா நிறுவனத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் ரெமி மெய்லார்டு கூறுகையில், 'முதல் சி-295 விமானத்தைப் பெற்றுக் கொள்வதற்கு இந்திய விமானப் படைத் தலைமைத் தளபதி ஏர் மார்ஷல் வி.ஆர்.சௌதாரி ஸ்பெயினில் உள்ள செவில் நகருக்கு விரைவில் செல்ல இருக்கிறார்.

வரும் 2026-ஆம் ஆண்டு முதல்,இந்தியாவில்விமானத் தயாரிப்பு தொடங்கப்படும்' என்றார்.

EVA STALIN I

# இந்தியா, சிங்கப்பூர் இடையே நீதித் துறை ஒத்துழைப்பில் புரிந்துணர்வு ஒப்பந்தம்

**புது தில்லி, செப். 7:** சிங்கப்பூர் மற்றும் இந்திய உச்சநீதிமன்றதலைமைநீதிபதிகள் வியாழக்கிழமை நடத்திய சந்திப்பில் இரு நாடுகளுக்கு இடையே நீதித் துறை ஒத்துழைப்பில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையொப்பமானது.

இந்திய உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட் அரசுமுறைப் பயணமாக சிங்கப்பூர் சென்றுள்ளார். அந்நாட்டின் உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி சுந்தரேஷ் மேனனை வியாழக்கிழமை சந்தித்து ஆலோசனை நடத்தினார்.

அப்போது, இரு நாடுகளின் உச்ச நீதிமன்றங்களுக்கு இடையே நீதித்துறை ஒத்துழைப்பில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையொப்பமானது என உச்ச நீதிமன்ற அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்திய உச்ச நீதிமன்றத்தின் 73-ஆவது ஆண்டு தொடக்க விழாவில் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்க சிங்கப்பூர் உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி சுந்தரேஷ் மேனன் இந்தியாவுக்கு கடந்த பிப்ரவரி மாதத்தில் வருகை தந்திருந்தார்.

உச்ச நீதிமன்ற நீதிபதிகள் சிறப்பு அமர்விலும் இடம்பெற்று நீதிமன்ற நடவடிக்கைகளில் அவர் பங்கேற்றார். சிங்கப்பூரின் 4-ஆவது தலைமை நீதிபதியான சுந்தரேஷ் மேனன், கடந்த 2012-ஆம் முதல் அப்பொறுப்பு வகித்து வருகிறார்.



சிங்கப்பூரில் அந்நாட்டு உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி சுந்தரேஷ் மேனனை வியாழக்கிழமை சந்தித்த இந்திய உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட்.

# பூமி, நிலவைப் படம் பிடித்தது ஆதித்யா-எல்1

**பெங்களூரு, செப்.7:** சூரியனின் புறவெளியை ஆய்வு செய்ய அனுப்பப்பட்ட ஆதித்யா-எல் 1 விண்கலம் பூமி, நிலவை படம் பிடித்தும், தன்னையும் தற்படம் எடுத்தும் அனுப்பி உள்ளது.

இந்தப் படங்களை இந்திய விண்வெளி ஆய்வு மையமான இஸ்ரோ வியாழக்கிழமை வெளியிட்டது.

செப்டம்பர் 2-ஆம் தேதி ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து பிஎஸ்எல்வி சி-57 ராக்கெட் மூலம் ஆதித்யா-எல்1 விண்கலம் ஏவப்பட்டது. ஆதித்யா விண்கலத்தை நான்கு முறை சுற்றுப்பாதை மாற்றப்பட்டு, புவி வட்டப் பாதையில் இருந்து விண்கலம் விலக்கப்பட்டு 15 லட்சம் கி.மீ. தொலைவில் உள்ள எல்-1 புள்ளி அருகே உள்ள சூரிய ஒளிவட்டப் பாதையில் விண்கலம் நிலைநிறுத்தப்படும்.

125 நாள்களுக்கான இந்தப் பயணத்திற்கு இடையே ஆதித்யா-எல்1 விண்கலத்தில் பொருத்தப்பட்டுள்ள கேமரா விண்ணில் இருந்து பூமி, நிலவு, மற்றும் தற்படங்களை எடுத்து தரைக்கட்டுப்பாட்டு மையத்துக்கு ஆய்வுக்காக அனுப்பி உள்ளது.

இந்த தற்படத்தில் வி.இ.எல்.சி. (விசிபிள் எமிஷன் லைன் லரோனாகிராஃப்), எஸ்.யு.ஐ.டி. (சோலார் அல்ட்ரா வயலெட் இமேஜர்) ஆகிய ஆய்வுக் கருவிகள் தெரிகின்றன.

ஆதித்யா- எல்1 விண்கலத்தில் சூரியனை ஆய்வு செய்வதற்காக மொத்தம் 7 ஆய்வுக் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன. சூரியனில் இருந்து வெளிப்படும் ஒளிக்கதிர்களை 4 ஆய்வுக் கருவிகளும், விண்கலம் நிலைநிறுத்தப்படும் இடத்தில் காணப்படும் பிளாஸ்மா, காந்தப்புலத்தை 3 ஆய்வுக் கருவிகளும் ஆய்வு செய்யவிருக்கின்றன.

பூமியில் இருந்து 15 லட்சம் கி.மீ. தொலைவில் அமைந்திருக்கும் லெக்ராஞ்ச்-1 முனையில் சூரியனை நோக்கி அதன் ஒளிவட்ட சுற்றுப்பாதையில் ஆதித்யா-எல்1 விண்கலம் நிலைநிறுத்தப்படும்.

சூரியன் சுற்றும் நிலையிலேயே ஆதித்யா- எல்1 விண்கலமும் சுற்றிவரும் என்பதால் சூரியனின் நடவடிக்கைகளை தொடர்ந்து கண்காணித்து, ஆய்வுக்கு உட்படுத்த முடியும் என்று இஸ்ரோ தெரிவித்துள்ளது.

ஒளிவட்ட சுற்றுப்பாதையில் நிலைநிறுத்தப்பட்ட பிறகு நாளொன்றுக்கு 1,440 புகைப்படங்களை ஆதித்யா-எல்1 விண்கலம் அனுப்பவுள்ளது. அந்த புகைப்படங்கள் ஆய்வு செய்யப்பட்டு, சூரியனில் இருந்து வெளிப்படும் ஒளிக்கதிர்களின் தன்மை ஆராயப்படும்.

இந்தப் பயணம் நிறைவேற சுமார் 4 மாதங்களாகும். இந்தப் பயணத்தை மேற்கொண்டுள்ள ஆதித்யா-எல்1 விண்கலம் முதல் முறையாக பூமியையும் நிலவையும் படம் எடுத்ததுடன் தற்படமும் எடுத்து அனுப்பியுள்ளது.

இதை பெங்களூரில் உள்ள இஸ்ரோ தரைகட்டுப்பாட்டு தலைமையகம் வியாழக்கிழமை எக்ஸ் வலைதளத்தில் வெளியிட்டுள்ளது. அந்த தற்படத்தில் இரு ஆய்வு கருவிகள் காணப்படுகின்றன. ஆதித்யா-எல்1 விண்கலம் எல்-1 புள்ளியை சென்றடைந்தவுடன் தினசரி சுமார் 1,440-க்கும் மேற்பட்ட படங்களை எடுத்து அனுப்ப உள்ளது.




ஆதித்யா எல்-1 விண்கலம் எடுத்து அனுப்பிய (இடமிருந்து) தற்படம், பூமி, நிலவு (வட்டமிடப்பட்டுள்ளது)

# நிலவுக்கு விண்கலம் அனுப்பியது ஜப்பான்



**டோக்கியோ, செப். 7:** நிலவில் ஆய்வுகள் மேற்கொள்வதற்காக எக்ஸ்-ரே தொலைநோக்கியுடன் கூடிய விண்கலம் மற்றும் லேண்டரை ஜப்பான் விண்வெளி ஆய்வு நிலையமான ஜக்ஸா வியாழக்கிழமை விண்ணில் செலுத்தியது.

அந்த மையத்தின் ஹெச்ஐஐ-ஏ ராக்கெட் மூலம் விண்ணில் ஏவப்பட்ட அந்த விண்கலம், வெற்றிகரமாக அதன் வட்டப் பாதையில் செலுத்தப்பட்டது. அந்த விண்கலத்தில் இணைக்கப்பட்டுள்ள லேண்டருக்கு 'ஸ்லிம்' (ஸ்மார்ட் லேண்டர் ஃபார் இன்வெஸ்டிகேட்டிங் மூன்) என்று பெயரிடப்பட்டுள்ளது.

EVA STALIN IAS ACADEMY